வள்ளுவர் முதியோர் இல்லம்

# நாவுக்கரசி

(புனைகதை)



வள்ளலார் குழந்தையர் காப்பகம்




முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

# நாவுக்கரசி

(புனைகதை)

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்

முனைவர் பி.தமிழகனார்

## நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூற்பெயர் | : நாவுக்கரசி |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரனார் |
| முதலாம்பதிப்பு | : தி.பி. 2051; கி.பி. 2020. |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 13.7 வெள்ளைத்தாள் |
| அளவு | : தெம்மி 1/8 |
| பக்கம் | : (vi) + 42 = 48. |
| படிகள் | : 300. |
| விலை | : உருவா 30. |
| நூலாக்கம் | : தி பிரிண்டிங்கு அவுசு<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431 - 202421 |
| வெளியீடு & கிடைக்குமிடம் | : திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006<br>9442760616<br>&<br>பி. தமிழகன்<br>2, பிச்சையம்மாள் நகர்<br>காசாமலை<br>திருச்சிராப்பள்ளி - 23<br>9940704702, |


❖❖❖

# நாவுக்கரசி

**"அவலப் பிறப்பொன்று, அவலம் துடைப்புப் பிறப்பாகச் சிறப்பது"** இக்கதை.

**"அருளாளர் அற்றுப் போகவில்லை, தொண்டர் அற்றுப் போகவில்லை. இவர்களுக்கு மறுதலையானவர்களும் அற்றுப் போகவில்லை"** என்பவற்றைத் தெளியக் காட்டும் புனைவு இது. "துறவினும் விஞ்சும், இல்லறவாணர் இல்லாமல் இல்லை." என்பதை நிறுவுவதும் இது.

**'படமாடக் கோயில் தொண்டினும், நடமாடக் கோயில் தொண்டே நனி சிறந்தது" என்பதை நிலைநாட்டும் நயனமைந்தது**, இப்புனைவு! "இளமைக் காப்பகமும் முதுமைப் பேணகமும் காலநிலைக் கட்டாயம் என்பதை விளக்குவதும் இது."

**நாவுக்கரசி** போன்றவர் கோடிக்கு ஒருவர் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதும் இப்புனைவு; "நல்லதற்குத் துணையாகத் தேடாமல் வருவார் – உளர் என்பது இதன் **நற்செய்தி!"** இக்கதைப் பிழிவு **நிறைவுப் பாடல்.**

2019 திசம்பர் 1 ஆம் நாள் நெய்வேலியில், நெய்வேலி திருமிகு **அருள்துரையார்** குடும்பத் திருமணம் நடத்திவைக்க நானும், **முனைவர் பி. தமிழகனாரும்** சென்றோம்.

திருமண நிகழ்வின்பின், நெய்வேலி வள்ளுவர் கோட்டத்தில், நெய்வேலி உ.த.க; புதுவை **உ.த.க. சார்பில் தமிழ்முறைத் திருமணப் பயிற்சி** நடத்தினோம். சற்றொப்ப, **நாற்பதின்மர்** பயிற்சிக்கு வந்து சான்று பெற்றனர். அவண் வந்த **பேரா. தமிழ்நன்மதி அவர்கள் வழங்கிய கொடையால்** இந்,**'நாவுக்கரசி'** வெளியிடப்படுகிறது. அந்நிகழ்வுத் தலைவர் மாநிலக் குழந்தை நலக் கருத்துரைஞர், **குழந்தை நலமருத்துவர் திருமிகு அ. செந்திலார்.**

என் இனிய பேர்த்தியார் திருநிறை **முத்தரசியார்** "மானுட சேவை மாண்பு" என்னும் நல்லுரை வழங்கியுள்ளார். அவர்க்கு அன்பான வாழ்த்து. இதன் பதிப்புப் பொறுப்பு ஏற்றவர் முனைவர் **பி. தமிழகனார்.** அச்சீடு, **திருச்சிராப்பள்ளி அச்சுக் குழும்பு.** இவர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

**இன்ப அன்புடன்,**

**இரா. இளங்குமரன்.**

## மாறுபட வேண்டிய மாண்பு

தாத்தாவின் தமிழ் எழுத்தின் மற்றொரு புதிய பரிமாணம் புனைகதை நாவுக்கரசி என்ற புனைகதையை அச்சிடும்முன் வாசிக்க வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியை உரித்தாக்குகிறேன். தற்போதைய சுயநலம் மிகுதியாகக் காண்கின்ற சூழலில், ஓதுவார், அவரின் நண்பர், பாட்டி, பன்னீர் என அனைவரும் தன்னலம் கருதா மக்கள் இன்னும் உளர் என நேர்மறை நம்பிக்கையை ஊட்டுகின்றனர். தெய்வ சேவையை விட மானுட சேவை பெரிதென வாழ்வில் மிகுந்த துயரத்தைக் கண்டும், சுயத்தை விட்டுக் கொடாமல், சிந்தையில் தெளிவுடன், மன உறுதியுடன் வாழ்வில் நம்பிக்கை கொண்ட போராட்டத்தையும், எளிதாக எடுத்துக் கொண்டு, பாசத்தையும் தாமரை இலை மேல் தண்ணீராகக் காட்டும் இசையரசியாக, பிணிக்கு மருந்திட்ட உயரிய எண்ணம் கொண்ட செவிலியின் கதாபாத்திரம் எண்ணற்றோரை வாழ்வில் நம்பிக்கை கொள்ள முயற்சியை என்றும் தொடரத் தூண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மருத்துவரின் பரிவும், பரந்துபட்ட நோயைப்பாடலில் தணிக்கக் கொண்ட எண்ணமும், நோயிலிருந்து மீட்கும் திறனும் மிக அருமை. அதனினும் அருமை பெயர் கெடாமல் மருத்துவர் என மனத்தில் மரியாதையை நாமறியாமல் செதுக்கியது. பன்னீர், பாட்டி குடும்பத்தினர் உறவையும், ஆதாயமும் பாரா மனிதத்தைக் காணும் உயரிய சிந்தை கொண்டோர். நன்மையும், கேடும் நிறைந்ததே வாழ்க்கை. உறவில் மகளான செல்வம் மட்டுமே குறியான கதாபாத்திரம் படிக்கும் போதே வெறுப்பைத் தூண்டுவதுடன் கதவில் நெற்றி இடித்த போது, பரிதாபப் படத் தோன்றவில்லை. பாலுவின் நேர்மையும், சமுதாயச் சிந்தையும், பெரியண்ணனைக் கண்டறிந்து அடையாளம் காட்டிய திறனும் பாராட்டுக்குரியவை. அனைவருக்கும் தொடக்கப்புள்ளியான அரசப்பர் உழைப்பு, உண்மை, தீர்க்கமான அறிவு, விடா முயற்சி, சக மனிதர்களின் மீதான பாசம், கருணை, சமூக

அக்கறை எனப் படுத்த படுக்கையாய் அறிமுகமானாலும், சிந்தனையில் செயலில் வானளாவ உயர்ந்து நிற்கிறார். வள்ளுவர் முதியோர் இல்லமும், வள்ளலார் குழந்தைகள் காப்பகமும், உறவற்ற / ஒதுக்கப்பட்டோருக்கு வழிகாட்டும் விதம் இன்றைய தேவை. தமிழும், தமிழ்ப்பாடலும் இக்கதையின் தனிச்சுவை என்பது சிறப்பம்சம். நாவுக்கரசியை வாசிக்கவும், கதை குறித்து எழுத வைத்தமைக்கும் தாத்தாவிற்கு மீண்டும் நன்றி.

**சான் கிறித் தோபர் முத்தரசி.**

## "நாவுக்கரசி"


| வரிசை | உள்ளுறை | பக்கம் |
|---|---|---|
| 1. | வேண்டுகை | 1 |
| 2. | நாவுக்கரசி | 4 |
| 3. | தாயினும் தாய் | 7 |
| 4. | வாழும் தெய்வத் தொண்டு | 10 |
| 5. | படிப்பாயா? பாடுவாயா? | 13 |
| 6. | உருகவைத்த பாட்டு | 16 |
| 7. | சான்றோர் வாழ்ந்த கடையம் | 19 |
| 8. | அடிக்கணக்கு | 22 |
| 9. | நந்தவனக் குழந்தை | 25 |
| 10. | முதல் விருந்தாளி | 28 |
| 11. | புண்படுத்தமில்லை; பண்படுத்தம்; | 32 |
| 12. | காப்பக அமைப்பு | 35 |
| 13. | திறப்பு விழா | 38 |
| 14. | நிறைவு | 41 |

# 1. வேண்டுகை

## ஒரு வேண்டுகை

"சென்னை, இராயப்பேட்டை, திரு.வி.க. பூங்காத்தெரு, 5 ஆம் எண் வீட்டில் இருக்கும் அரசப்பன் வேண்டுதல் விண்ணப்பம்:"

"நான் அறுபத்து நான்கு வயதினன். முதுகந் தண்டுத் தேய்வால் நடமாட முடியாத படுக்கையன். எனக்குத் துணைவியோ மக்களோ இல்லை."

எனக்கு உணவாக்கித் தரவும், என்னைச் செவிலித்தாயாய்ப் பேணிக் கொள்ளவும், நாற்பது வயதை ஒட்டியவராய், வீடு நில புலம், பெற்றோர் பிள்ளைகள் இல்லாத கைம்மையராய், மணம் செய்து கொள்ளும் விருப்பம் இல்லாதவராய், பரிவுடைய தொண்டு விருப்பினராய், உடன் தங்குபவராய் இருப்பார் ஒருவர் தேவை.

அவர்க்கு ஊண் உடை மற்றைத் தேவை எதற்கும் குறைபாடின்றிப் பெறுபவராய் இருப்பதற்கு வேண்டும் வகைகள் எல்லாமும் இங்கே உண்டு. மாதச் சம்பளம் என்பது இல்லை. அவர் வீட்டில், அவர் தந்தையைப் பேணுபவர்போல் இருத்தல் வேண்டும்.

தம் வேலைக்குத் துணையாள் வைத்துக் கொள்ளக் கூடாது. படித்தவராய், சொல்வதை எழுதுபவராய், வரவு செலவு எழுதுபவராய், தொலைப் பேசியில் செய்தி சொல்ல, வரும் செய்தியைக் கூறத் தக்கவராய் இருத்தல் வேண்டும்.

–இத்தகையர் மெய்யாகவே இருப்பின், குறித்த முகவரிக்கு நேரே வருக. கடிதத் தொடர்பு வேண்டா; பேசியில் செய்தி வேண்டா." அரசப்பன்.

வேலை, கூலி, ஏந்தான வாழ்வு என்றால் வரிசையில் நிற்பார் உண்டு. ஆனால், இவ்வறிக்கை தந்நலமற்றவர்க்கும், முழுதுற ஒப்படைப்புச் செய்யும் தொண்டருக்கும் உரியது. ஆதலால், எவரும் ஒரு மாத அளவு எட்டிப் பார்க்கவில்லை!

அவர்க்குத் துணை இல்லை. ஒரு மகனைப் பெற்றுத் தருநிலையில் தாயும் மகனுமே முடிந்து விட்டனர். **அவர் மணம் செய்ய விரும்பவில்லை.** பெற்றோர் வைத்த சொத்து நிலம்புலமும், வீடும் உண்டு. அவற்றைக் கொண்டு வாழ்ந்தார். உடல் நலம் இருக்கும் வரை தாமே ஆக்கியுண்டு, கடமைகளைச் செய்துவந்தார். அவர் செல்வம் கருதி, உதவிக்கு வந்தனர் பலர். அவர் நோக்கை முன்னரே அறிந்து கொள்ளவல்ல அவர், ஏற்றுக் கொள்ளவில்லை. **உற்ற நண்பர் ஒருவரும் அவர்தம் முதிய பாட்டியரும்** உதவி வந்தனர். அவ்வுதவி பயனெதிர்பாரா உதவி; அவ்வுதவியால் நண்பர் குடும்பத்திற்கு ஏற்படும் இடரை நினைத்துப் பெரிதும் வருந்தினார். அந்நண்பரை மன்றாடிக் கேட்டே, இவ் விண்ணப்பம் விடுத்தார்.

"உதவியை ஒருவர் செய்ய முன்னின்றாலும், அவ்வுதவி செய்தலால் அவர்க்கும் அவர் குடும்பத்திற்கும் ஏற்படும் இடரை எண்ணிய அவர்க்கு மனம் கொள்ளவில்லை."

**பாட்டியும் முதியர்; நண்பரும் வேலை செய்பவர்; அவரையே நம்பியிருக்கும் குடும்பம்; இவற்றை**யெல்லாம் எண்ணியே இம்முடிபு எடுத்தார்.

அரசப்பர்க்குச் சிற்றப்பா ஒருவர் இருந்தார்; அவர்க்கு மக்களும் இருந்தனர். அவர்கள் ஒப்புக்கு வந்து எட்டிப் பார்த்து, "**எப்பொழுது முடிவார், சொத்தை நமக்காக்கிக் கொள்ளலாம்**" என்றே எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவர்களை வரவிட்டாலே என்ன நேர்ந்துவிடுமோ என்று எண்ணியவராய் அவர்கள், வருதலைக் கண்டு கொள்ளவில்லை, வெறுக்கவும் செய்தார்.

ஒருநாள் தம் நண்பரை அழைத்து, "**என் நிலை எப்பொழுது என்ன என்பது தெரியாது.** யான் '**இறுதி முறி**' ஒன்று எழுத வேண்டும். வழக்குரைஞர் ஒருவரை அழைத்து வந்தால் நல்லது" என்றார்.

"எனக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை. இதற்கென அரசு உரிமை வழங்கிய வழக்கறிஞர் உண்டு. அவர்களை அறிந்து, ஞாயிறன்று அழைத்து வருகிறேன். அதற்குரிய முத்திரைத் தாளும்

வாங்க வேண்டும். நான் தனியே மருத்துவரைக் கலந்தேன்." "இப்பொழுது நான் போடும் ஊசியும், தரும் மருந்தும் அரசப்பரை **ஆறுமாதத்தில் எழுந்து உட்கார வைத்துவிடும்.** ஆனால், அவர் நம்பிக்கை இழக்கிறார். **என் மருத்துவம் ஒருபங்கு என்றால்,** அவர் கொள்ளும் **நம்பிக்கை மும்மடங்கு நன்மை தரும்** என்றார்" என்று கூறினார்.

"எனக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. நான் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் தரும் இடரை நினைத்தால், என் நிலை சறுக்கல் ஆகிவிடுகிறது" என்றார்.

"உங்களை என் உடன்பிறப்பாக நான் எண்ணிச் செய்தாலும், உங்களுக்கு அந்த எண்ணமும் உறுதியும் இல்லை" என்றார்.

அவர் கையைப் பற்றி "அப்படி எண்ணாதீர்கள், என் நம்பிக்கை என் உயிரோடு பற்றிப் பிணைந்தது; உங்களைப் போல் யார் செய்வார்?" என்று கண்ணீர் மலங்கினார்; விடை பெற்றுச் சென்றார் நண்பர். அவர் பாட்டி பக்கத்தே நின்று கொண்டிருந்தார்.

❖❖❖

## 2. நாவுக்கரசி

பேரன் சென்றதும் பாட்டி வாயில் பக்கம் நின்றார். வெள்ளைப் புடைவை கட்டிய ஒரு பெண்மணி **"ஐயா அரசப்பர் வீடு இதுவா?"** என்று கேட்டார்.

"ஆம், இதுதான்; வா என்றார்."

"என்ன செய்தி"

"வேலையாள் அவருக்கு வேண்டுமாம். அவர் செய்தித்தாளில் தந்த விளம்பரத்தைச் சொன்னார் ஒருவர்."

"எங்கே இருக்கிறாய்?"

"**திருவொற்றியூர்க்** கோயிலின் முன்மண்டபத்தின் ஓர் ஓரத்தில் தங்கிக் கொள்வேன்."

"ஐயாவைப் பார்க்கலாம். அவர் படுத்த படுக்கையாக உள்ளார்."

**"தெரியும் என்னைப் போகச் சொன்னவர் எல்லாம் சொன்னார்."**

"தம்பி, உங்களைப் பார்க்கத் திருவொற்றியூரிலிருந்து ஒரு பெண் வந்துள்ளார்.",

"வரச் சொல்லுங்கள்" என்றார் அரசப்பன்.

வந்தவள் படுத்திருந்த அரசப்பரை வணங்கினாள்.

"என்ன?"

"நீங்கள் தந்திருந்த அறிக்கையை ஒருவர் சொன்னார். அதனால் வந்தேன்."

**"உங்கள் பெயர்?"**

**"நாவுக்கரசி!"**

**"அந்தத் தொண்டர் பெருமான் பெயரா?"**

"கண்ணீர் வழிந்தது, பாட்டி கலங்கினார்;"

"நாவுக்கரசி, தன்முன்தானையால் அவர் கண்ணீரைத் துடைத்தாள்."

"தம்பி, இவள் உங்கள் செய்தி முழுவதும் தெரிந்துதான் வந்துள்ளாள்."

"இவளோடு பேசுங்கள்; நான் வீட்டுக்குப் போய் வருகிறேன்."

"அந்தப் பலகையைப் பக்கத்தில் இழுத்துப்போட்டு இருக்கச் சொன்னார் அரசப்பர்."

"அவள் கீழே அமர்ந்தாள்."

"என் படுத்த நிலையும், எழுந்து எதுவும் செய்யா முடியா நிலையும் உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்; 'நீ என்றே சொல்லுங்கள்"

"பழக்கமில்லை"

"பழகிக் கொள்ளுங்கள்!"

"ஒருதாய் தான் பெற்ற குழந்தையை எப்படிப் பேணி மகிழ்வாளோ, அப்படிச் செய்வதில் நான் மகிழ்வேன்."

"சாப்பிட்டாயா?"

"சாப்பிட்டுத்தான் வந்தேன்."

"என்ன எதிர்பார்க்கிறாய்"

"எனக்கு உங்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பை அருளல் ஒன்றையே எதிர்பார்க்கிறேன்."

"நீ நாவுக்கரசிதான்;"

"ஒற்றியூர்க்கு என்னை ஒப்படைத்து, கிடைத்த கோயில் உணவை உண்டு, பூப்பறித்துத் தருபவள் நான். அப்பரடிகள், பட்டினத்தார், வள்ளலார் தடம்பட்ட இடம்."

"படமாடும் - கோயிலுக்குச் செய்யும் தொண்டிலும் உயர்ந்த தொண்டு, நடமாடும் கோயிலுக்குச் செய்யும் தொண்டு என்பதை, உங்கள் அறிக்கை தூண்டியதால் வந்தேன்" என்றாள்.

பாட்டி வந்தார்.

"தம்பி இவள் இருக்கலாம் இல்லையா?"

"உங்கள் எண்ணமென்ன?"

"பெயராலே உருக வைத்தவள், இவள் தொண்டால் நீங்கள் எழுந்து நடமாட ஆவீர்கள்;"

"பாட்டியிடம் கேட்டு, அறிய வேண்டியதை அறிந்து கொள்" என்று சொல்ல, சமையல் அறை சென்றனர்.

பொருள்கள், சமையல் கருவிகள், உணவமைப்பு, உணவு, மருந்து கொடுக்கும் வேளை, மருந்துகள் இருக்கும் இடம், குடிப்பு என்பவற்றைப் பாட்டி விளக்கமாகச் சொன்னார்.

கேட்டுக் கொண்ட நாவரசி, "நீங்கள் ஊடே ஊடே வந்து எட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டையும் நான் அறிந்த கொள்ள வேண்டும். ஏதாவது கேட்க வேண்டும் என்றால் நான் வந்து கேட்டுக் கொள்வேன்" என்றாள்.

"தம்பி, இவள் பார்த்துக் கொள்வாள்; நானும் ஊடே ஊடே வருவேன். எங்கள் வீட்டைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாள். நான் காட்டி விட்டு, அவளை வரச் சொல்கிறேன்." என்று கூட்டிக் கொண்டு போனார்.

❖❖❖

# 3. தாயினும் தாய்

பாட்டி வீட்டில் பேரன் மனைவி இருந்தார். பேரன் வேலைக்குப் போயிருந்தார். பிள்ளைகள் இருவரும் பள்ளி சென்றிருந்தனர். அதே தெருவில் பத்து வீடுகளுக்கு அப்பால் தான் பாட்டி வீடு. மருமகள், நாவுக்கரசியிடம் மகிழ்வாகப் பேசினாள். "நல்ல மனிதர். அவரும் இவரும் அண்ணன் தம்பியாகப் பழகியவர்கள். இப்பொழுதுள்ள நிலை, ஒருமாதத்துக்கு முன் ஏற்பட்டது தான். அதற்கு முன் சில ஆண்டுகளாகவே இடுப்பு எலும்பு தேய்மானம் ஏற்பட்டதை எண்ணாமல் அவ்வப்போது, ஏதோ தடவு மருந்து தடவிக் கொண்டு வேலைக்குப் போனார். கடைக் கணக்கு எழுதும் வேலை. இருந்த இருப்பில் இருந்தே வேலை செய்தது முதுகெலும்புத் தேய்வு – மூலக் கடுப்பு என வாட்டப், படுத்த படுக்கை ஆகிவிட்டார்; நீ நன்றாகப் பார்த்துக் கொண்டால், உனக்கு எக்குறையும் இராது. பாட்டியும் தம் பேரனைப் போலப் பார்த்துக் கொண்டார். அவர்க்கும் முடியாமல் தான் போய் வந்தார். ஏதாவது வேண்டுமானால் நீ எப்பொழுதும் வரலாம். இவரும், அவரைக் காலை மாலை பாராமல் இரார்." என்றாள். பாட்டி வீட்டில் விடைபெற்றுக் கொண்டு அரசி, அரசப்பர் வீட்டுக்கு வந்தாள்.

**நாவுக்கரசி சிரித்தாள், தனக்குள்ளாக! என்னவென்றால், படுக்கையில் கிடந்தாலும் அரசப்பர்! மேடையேறாத – பாடாத – தான் நாவுக்கரசி;** அந்த நினைவோடு, **'அரசரை அரசி வணங்குகிறேன்'** என்று அவர்காலைத் தொட்டாள்!

"நான் எண்ணிப் பாராத அரசி; என்றார் அரசப்பர்; அவர் முகம் மலர்ந்திருந்தது."

"இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?"

"எழுதப்படிக்கத் தெரியும் இல்லையா?"

"தெரியும்"

"உன்பெயரை எழுது."

"தி. திருநாவுக்கரசி" என எழுதினாள்.

அப்பா பெயரென்ன?

"தெரியாது;

"தீ. போடுகிறாய்"

"என்னை எடுத்து வளர்த்துப் படிக்க வைத்த ஓதுவார் பெயர் திருப்பதி."

"இருக்கிறாரா?"

"இல்லை! நான் ஆறாம் வகுபபுப் படிக்கும் போதே அவர் காலமாகிவிட்டார். அதற்குப்பின், அந்த வீட்டில் நான் இருக்க முடியவில்லை." என் நிலை அறிந்த ஓதுவார் நண்பர், நந்தவனத்தில் பூப்பறித்து, கோயிலுக்கு மாலை கட்டுபவர். அவர் என்னைப் பூப்பறிக்கவும், கட்டவும் துணையாக வைத்துக் கொண்டு, கோயில் உணவு கொள்ளவும் மண்டபத்தில் தங்கவும் ஏற்பாடு செய்தார்.

"திருமணம்"

"செய்யவில்லை"

"பிறப்பு வளர்ப்பு என்பவற்றில் ஏற்பட்ட சலிப்பால், திருமணம் கொள்வதை வெறுத்தேன்."

"பிறகு ஏன் வெள்ளையுடை?"

"வள்ளலார் உடுத்திய உடை; எனக்குப் பாதுகாப்புடை;"

"புண்படுத்தி விட்டேனா?"

"இல்லை, பண்படுத்துகிறீர்கள்."

"எப்படி? "மணம் செய்யும் விருப்பம் இல்லாதவராய்" என்ற தொடரால்!"

"என்னை ஆழத்துள் ஆழமாகச் சிந்திக்க வைக்கிறாய்!"

"இங்கே தானே உங்கள் காலடியில் இருக்கப் போகிறேன். வாய்க்கும் போது பேசிக் கொள்ளலாம்."

"எழுதப்படிக்கத் தெரியுமா என்றீர்கள், ஏன்?"

**"அதோ, அட்டை பார்!"**

"பாட்டியின் பேரன், மருத்துவர் தந்த குறிப்பை வரிசையாக எழுதி வைத்தது; அதன்படி உணவு – மருந்து – மாத்திரை தர வேண்டும்."

"எனக்குத் தேவைப்படும் போது நீர்க்குழாய், மலப்பை மாட்டித் தூய்மை செய்ய வேண்டும்."

**"அருவறுப்பானது தான், என்ன செய்வது;"**

"நான், **ஒருதாய், தான் பெற்ற பிள்ளையை எப்படிப் பேணுவாளோ அப்படிப் பேணி மகிழ்வேன்"** என்று சொல்லவில்லையா? அதை எண்ணுங்கள்; அது **பன்னீரும் சந்தனமும்.**

"நாவுக்கரசி உன்கையை நீட்டு; **நீ மெய்யாகவே என் தாயினும் தாய் ஆய்விட்டாய்;"** என்று கையைக் குலுக்கினார்.

"என்னைப் பெற்றவள் யார்? என் தந்தை யார்? அவர்கள் சூழல் என்ன? குப்பைத் தொட்டிக்குள் போடுவானேன்; இரக்க மிக்க ஓதுவார் உருகி வந்து எடுப்பானேன்? அவர் பிள்ளையாய் வளர்ப்பானேன்; அங்கிருந்து வெளியேற நேர்வானேன்; நந்தவனக்காரர் உதவுவானேன்; வழிபாட்டுக்கு வந்த ஒருவர், உங்கள் விண்ணப்பத்தைத் தந்து செலவுக்குப் பணமும் தந்து விடுப்பானேன்; **சுழலும் உலகின் உழலும் நிலை இது தான்**; தம்மை அறியாமல் கையெடுத்து வணங்கினார் அரசப்பர்."

❖❖❖

# 4. வாழும் தெய்வத் தொண்டு

பாட்டியின் பேரன், **பன்னீர்** வந்தார்.

வீட்டுக்குப் போய் வந்ததால், பாட்டியும் துணைவியும் சொல்லியவற்றைக் கேட்டே மகிழ்வோடு வந்தார்.

"இவர் பாட்டியின் பேரர்" என்றார் அரசப்பர்.

அரசி வணங்கினார்.

"உங்கள் குடும்ப உதவி இவருக்கு வாய்த்தமை கிடைத்தற்கு அரியது."

**"அந்தப் பேற்றை நீ தட்டிப் பறித்து விட்டாய்; பாட்டி அருமையாகச் சொன்னார், உன்னைப் பற்றி."**

**"கோயில் மண்டபத்தில் கிடந்த நான், வாழும் தெய்வத்திற்குத் தொண்டு செய்ய வாய்த்ததாக எண்ணுகிறேன்."**

"உங்கள் கையெழுத்து மணி மணியாக உள்ளது; ஒருவர் கையெழுத்தின் அழகு, அவர் பண்பைக் காட்டும் என்பர்."

"நான் அதனை ஏற்றாலும், அதற்க விதி விலக்கு உண்டு. **தமிழ்த் தென்றல்** திரு.வி.க." வாழ்வார்க்கு எடுத்துக் காட்டாம் வாழ்வினார்; அவர் கையெழுத்து எளிதில் அறிய முடியாக் கிறுக்கல் போல இருக்கும் என்பர்.

"நாவுக்கரசி எழுத்தும் உன்னெழுத்துக்குக் குறையாததே என்று அவள் பெயர் எழுதிய தாளைத் தந்தார் அரசப்பர்."

மிக அருமை; **ஓவிய எழுத்து, கண்ணெழுத்து** எனத் தமிழ் எழுத்தைக் கூறுவர் அவற்றுக்குச் சான்றாக உள்ளது என்றார் பன்னீர்.

தம்பி நான் காலையில் உங்களிடம் சொல்லியதை, ஆர அமரச் செய்யலாம். விரைவு பட வேண்டியதில்லை.

"அந்தத் தேவையே இல்லாமல் போனாலும் நல்லதே!"

"இல்லை! **அத்திட்டம் மேலும் விரிவுறுவதற்கே தள்ளிப்போடுதல்**."

"சரி, வீட்டுக்கு வந்ததும், நாவுக்கரசியைப் பற்றி மகிழ்வாகச் சொன்னார் பாட்டி. பார்த்துவிட்டுப் போகலாம் என உடனே வந்தேன் என்று விடைபெற்றுக் கொண்டார்."

"இப்பொழுது உங்களுக்குப் பாலும் பனங்கற்கண்டும் போட்டுக் காய்ச்சித் தரவேண்டிய பொழுது; நான் காய்ச்சிக் கொண்டு வருகிறேன். அட்டையைப் படித்தேன்; கடிகையாரத்தில் மணியைப் பார்த்தேன். போதும் இல்லையா?"

"கடமை வல்லார்க்கு இவை போதும்!"

"நான் குடிக்க வேண்டுமே!"

"கெண்டியைப் பாட்டி காட்டினார். நான் பக்கத்தில் அமர்வேன்; கெண்டியில், குடிக்கும் வகையில் ஆற்றப்பட்ட பாலை விட்டுக் குழந்தைக்குப் புகட்டுவது போல் புகட்டுவேன்."

"சோறு?"

"அது சோறுண்ணும்போது நீங்களே தெரிந்து கொள்வீர்கள். பாட்டி சொன்னார், நான் பிள்ளை பெறாவிட்டாலும் பெற்றவர்கள் குழந்தைக்குச் சோறூட்டுவதைப் பாராதவள் இல்லையே!"

பால் காய்ச்சப் போனாள்.

**குழந்தை**யாவது, **தாயா**வது, **பாட்டி**யாவது, **செவிலி**யாவது, **மருத்துவி** ஆவது, **தவச்சியாவது** என ஆறுருவி, இவள் என எண்ணி உள்ளுள் மகிழ்ந்தார், அரசப்பர்.

ஆற்றிய பாலும், கெண்டியுமாகவந்த அரசி, அரசப்பர் முன் இருக்கை இட்டு அமர்ந்து, மெல்ல மெல்லப் பருகச் செய்தாள். பாலின், சுவையும் வெப்பம் அளவும் தக்வாக இருந்தமையும், பருகச் செய்த வகையும் அவரைக் "**கற்பித்து வாராக் கலை**"யென எண்ணச் செய்தன.

"ஏதாவது மாற்றம் வேண்டுமா?"

மாறும் உலகம் இது. ஆனால் உன் செயல் மாற்றம் வேண்டாதது!

"எனக்கோர் ஐயம்!"

"சொல்;"

"உங்களை, அப்பா எனலாமா?"

**"அப்படி அழைக்க நீ மாற வேண்டும்!"**

**"எப்படி?"**

**"என் மகளைக் கைம்மை உடையில் காண என்னால் முடியாது;"**

**"அப்படியானால், சாயப் புடைவை நான் கட்ட வேண்டும்! அப்படித் தானே!"**

"ஆம்! என் இனிய துணைவியார் கட்டிய, கட்டாத உடைகள் நிலைப்பேழையில் உள்ளன."

**"அவை வழிபடு தெய்வப்பொருள்! நான் எடேன்! உடேன்!** நான் மண்டபம் வந்தபின்தானே வெள்ளைப் புடவை. அதன்முன் என்னை வளர்த்த தெய்வத் தந்தை கொடுத்த வண்ணப் புடவையைக் கொண்டுதானே வந்துள்ளேன்! அவற்றைக் கொள்வேன். வேண்டும் போது புதுப் புடவை வாங்கிக் கொள்ளலாம்."

"அரசி தண்டவாளத்தில் செல்லும் தொடரி, **சந்திப்பில்** விலக்குத் தடத்தில் போவது இல்லையா? அதுபோல், அவர் கட்டாத புதுப் புடவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா;"

**"அது தொடரி; இயக்குபவன் இயக்க இயங்குவது. நான், தானியங்கி; உங்கள் நலம் கருதுபவள் நான்!"**

"அவ்வுடையை நான் உடுத்தின்..."

"உடுத்தின்..."

**"உங்கள் துணையை மறவாமல் நினைவூட்டி வருத்துமல்லவா;** ஆற்றில் குளிக்கப் போய்ச் சேற்றில் விழலாமா?"

அரசி உள்ளே போனாள், தான் வைத்திருந்த வண்ண உடையை உடுத்து வந்து 'அப்பா' என்றாள்.

"என் அறிவார்ந்த மகளே" என்றார் அரசப்பர்.

❖❖❖

# 5. படிப்பாயா பாடுவாயா ?

“அப்பா நிறைய பேசிவிட்டீர்கள்; நானும் இவ்வளவு பேசியிருக்கக் கூடாது. படுத்த நிலையில் பேசுவதற்கு முயற்சி வேண்டும்; அது தேறிவரும் உடலுக்கு மாறுபாடாகும். ஓய்வெடுங்கள்; அயர்வானால் உடன் உறங்குங்கள்;”

உடனுதவி வேண்டுமானால் ‘அரசி’ எனக்குரல் கொடுங்கள். நான் பகலில் உறங்க மாட்டேன். இரவிலும் மெல்ல அழைத்தாலும் ஒரு குரலில் எழுந்து விடுவேன். உங்களுக்குத் தேவை அமைதியும், மகிழ்வும்! என்று சொல்லி விட்டுச் சமைப்பதற்குச் சென்றாள். அரசப்பர் கண்ணை மூடி அயர்ந்திருந்தார்.

பாட்டி மெல்லென வந்தார். திகைப்பானார். உடைமாற்றம் கண்டு அரசியின் கன்னங்களை வருடினார்.

பேசினால் இடையூறு என மெல்ல நகர்ந்து விட்டார். சமையலை முடித்த அரசி, அமைதியாய் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

“அரசி”

“அப்பா”

“ஏதோ படிக்கிறாய்?”

“நாவுக்கரசர் தேவாரம்”

“தேவாரம் படிப்பாயா? பாடுவாயா?”

“இரண்டும் செய்வேன்.”

“ஒருபாட்டுப்பாடு”

**“ஓம்பினேன் கூட்டை வாளா**
**உள்ளத்தோர் கொடுமை வைத்துக்**
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க மாட்டேன்;
பாம்பின்வாய்த் தேரை போலப்
பலப்பல நினைக்கின் றேனை
**ஓம்பிநீ உய்யக் கொள்வாய்**
**ஒற்றியூர் உடைய கோவே!”**

"அம்மா, நீ நாவரசி மட்டுமில்லை **இசையரசியம்மா!**"

"அப்பா, ஓதுவார் வளர்ப்புப் பிள்ளை அப்பா நான்."

"தேவாரப் பாடல் எல்லாமும் பாடுவாயா?"

"இல்லை அப்பா! ஓதுவார்களே குறித்த சில பாடல்களைத்தான் பாடுவார்கள். அவற்றுள்ளும் எனக்குச் சிலவே மனப்பாடம். **இந்த இசை இன்பம் எனக்கு நல்ல மருந்தம்மா.**"

வழக்கமாக வரும் மருத்துவர் வந்தார். வந்தவர் இசை ஒலி கேட்டு அமைதியாக நின்றார். இசை இனிய மருந்தம்மா என்று அரசப்பர் கூறும்போது, அவர் கைதட்டினார்.

அரசி, வணங்கினார்.

"அம்மா அருமையான பாட்டு, இனிய குரல், பாடிய முறை அருமையினும் அருமை;"

"ஐயாவைப் பார்க்க வந்தீர்களா?"

"அவருக்குத் தொண்டு செய்யும் செவிலியாக வந்தேன்."

"இப்படிச் செவிலி ஆயிரத்தில் ஒருவர் கூட அமையமாட்டார். உங்கள் இசையமிழ்து, என் மருந்தினும் மருந்தாகி, இவரை நடக்க வைத்திடும்;" என்று சொல்லிவிட்டு அரசப்பரை ஆராயத் தொடங்கினார்.

"ஐயா, உங்கள் உடல்நிலை மிகச் சீராக உள்ளது. வழக்கம் போல் போடும் ஊசி, மருந்து போதும், உணவையும், குடிப்பையும் தவறாமல் காலத்தில் கொள்ளுங்கள்" என்றார்.

அரசி மருத்துவர்க்கு நாற்காலி இட்டார். "வேறு ஏதாவது வேண்டுமா அரசி" என்றார்.

"வேண்டா, என் கைவயம் உள்ளது."

"ஓர் உதவி செய்வீர்களா?"

"சொல்லுங்கள்!"

"நான் வாய்த்த ஒருநாளில் பதிவுகருவியுடன் வருகிறேன். உங்கள் இசையைப் பதிவு செய்து கொள்கிறேன். மருத்துவமனையில்

தங்கிப் படுக்கையில் இருக்கும் நோயர்க்கு இந்த இசை கேட்க வாய்ப்பின் பெருநலமாகும்" என்றார்.

"இசைத் தட்டுகள் உண்டு. ஆனால் பொருள் புரிய கருவியிசையோடு வரும் இசையினும் - உருகி உணர்ந்து பாடிய உங்கள் இசை இன்பத்தைக் கேட்பது இயற்கைக் குயிலிசையாக உள்ளது" என்றார்.

"நான் அப்பா முன் பாடுவது பலர்க்கும் பயனானால் மிக நலம் தானே; தங்கள் விருப்பம் போல் பதியலாம் என்றாள்."

"அப்பா, உங்கள் பெயர் அருமையான பெயர்."

"என் தாத்தா பெயர். என்ன அருமை."

"நாவுக்கு அரசர் பெயர்களில் ஒன்று **அப்பர்! அரசும் அப்பரும் இணைந்த பெயர் 'அரசப்பர்'** என்றாள்.

"இன்றுதான் என்பெயர் விளக்கம் அறிகிறேன். நடவரசரும் **'அரசர்'** தாமே என மகிழ்ந்தனர்."

நீவரப் பெற்றதால், நான் பெற்றதும் பெறப்போவதுமாம் பேறுகள் எவ்வெவையோ?

"முதலாம் பெறுதல் **'உடல்நலம் பெறுதல்'** என்று நகைத்தாள்."

❖❖❖

## 6. உருக வைத்த பாட்டு

ஒருமாதம் ஆகிவிட்டது. பாட்டி இரண்டு மூன்று முறையாவது நாள்தோறும் வருவார். பன்னீரும் காலை, மாலை வந்து செல்வார்.

மருந்தாலும் மகிழ்வாலும் அரசப்பர் இடுப்பு படிப்படியே நலம் பெற்று வந்தது. சாய்ந்திருக்கும் நிலை பெற்றார்.

ஒருநாள் நாவுக்கரசி

**"மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்**
**பொருந்தி நின்றெனக் காயளம் புண்ணியன்"**

என்னும் பாடலைப் பாடும்போது, மருத்துவர் வந்தார்! பதியும் எண்ணத்துடன் வந்தவர்க்கு மிக வியப்பாக இருந்தது.

அரசப்பரை ஆய்வு செய்து இன்னும், ஒரு மாதத்தில் நீங்களே உட்காரும் நிலை வந்துவிடும். என் மருந்தினும் மேம்பட்ட மருந்து நாவுகரசி தரும் இசை மருந்து எனப் பாராட்டிப் பல பாடல்களைப் பதிவு செய்தார்.

ஒற்றியூர், **வள்ளலார்** உவந்த ஊர். நீங்கள் அங்கே இருந்து கிடைத்தற்கரிய மருந்தாக வந்து விருந்து படைப்பவர்கள். அவர் பாடலில் ஒன்று பதிவது நல்லதென எண்ணுகிறேன் என்றார்" மருத்துவர்.

"**மருந்தானை**! மணியானை! வழுத்தா நின்ற
மந்திரங்கள் ஆனானை! வான நாட்டு
**விருந்தானை**! உறவானை! நண்பி னானை!
மேலானைக் கீழானை மேல்கீழ் என்னப்
பொருந்தானை! என்னுயிரில் பொருந்தி னானைப்!
பொன்னானைப்! பொருளானைப்! பொதுவாய் எங்கும்
இருந்தானை! இருப்பானை! இருக்கின் றானை
எம்மானைக்! **கண்டு களித்திருக்கின் றேனே**"

நாவுக்கரசி பாடல், அரசப்பரை, மருத்துவரை, வீட்டுள்வர வாயிலில் நின்று கேட்ட பன்னீரை உருகச் செய்தது.

"அம்மா நீங்கள் ஒருநாள் நம்மருத்துவமனைக்கு வந்து அங்குள்ள நோயர்க்குப் பாட முடியுமா?"

நம் மருத்துவமனை இருப்பது சிந்தாதிரிப் பேட்டைதானே என்றார்.

"**நான் என் அப்பாவுக்காகப் பாடினேன். உங்கள் நல்லெண்ணத்திற்காகப் பதிய இசைந்தேன். நான் மேடையேறேன்; பாடேன். பொறுத்துக் கொள்ளுங்கள்**" என்றாள்.

"அது பழமரம் போன்ற பயன் தானே!"

"அவ்வகையில் நான் '**அழுகிப் போன பழமரம்**' என்று வணங்கினாள். பன்னீர் உள்ளே வந்தார். மருத்துவர் புறப்பட்டார்."

நாவுக்கரசி **உன்னைப் பெற்றவள் பேறு பெற்றவள்** என்றார்.

'நன்றி' என்று சொல்லி, நாவுக்கரசி உள்ளே போய்விட்டாள்.

"அண்ணா என்ன அருமையான குரல்; என்ன அருமையான பாட்டு; அவள் வாழ்வில் பேரிடிபட்டுள்ளாள்"

"தம்பி, **நம் அறிவால் காண எட்டா ஆழத் துயர்ப்பதிவுச் சொல், அவள் சொல்.**"

"**அடங்கிக் கிடக்கும் எரிமலையும் ஒருநாள் கக்கும்!**"

"பார்த்துப் போக வந்த நான் இசைகேட்டு வாயிலிலேயே நின்று விட்டேன்." என்றார்.

உள்ளே போன அரசி வந்தாள்.

"அம்மா வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார்."

"அப்பா, மருத்துவர்க்கு நான் சொன்னது தப்பா?"

"**உன்னை அறிந்த நான், தப்பு என்ன மாட்டேன்; தலையால் வணங்கி ஏற்கிறேன்.**"

ஓதுவாரப்பாவொடு உருகி உருகிப் பாடுவேன். ஒற்றியூரப்பன் உலாவின் போது வாண வேடிக்கை மக்கள் ஒலி முழக்கம் கேட்டுக் **கட்டியிருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு வந்த காளை,**

**தாளத்தோடு பாடி வந்த அப்பாவின் குடலைக் கொம்பால் கிழித்து மிதியாக மிதித்துத் தாவியது.** நான் 'அப்பா' என்று அலறி மயங்கி விழுந்தேன். **நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது!** நான் மருத்துவமனையில் உணர்வின்றிக் கிடந்து மறுநாள் மயக்கம் தெளிந்தேன்!

**அப்பா முடிந்ததை, மூன்றாம் நாளே, சொல்ல அறிந்தேன். என்மேல் விழுந்த இடியாயிற்று** அது! அதன்பின் பாடுவது இல்லை. உங்கள் உடல் நலம் உளநலம் கருதி, உங்கள் முன் பாடியதை அல்லாமல், **அப்பா போனபின் கோயிலிலும் பாடுதலைத் தவிர்த்து விட்டேன்.**

"ஓதுவாரப்பா போனபின், நான் வீட்டுக்குச் செல்ல 'உள்ளே வராதே' என்று என் துணிகளைஅள்ளி எறிய, **வேறிடம் இல்லாமல் கோயில் மண்டபம் சென்றேன்."**

"அப்பொழுதுதான் ஓதுவாரப்பா நண்பர், என்னைக் கண்டு, பூப்பறிக்கவும் தொடுக்கவும் செய்து உண்ணவும் தங்கவும் உதவினார்."

**"அவர்க்கு நீ இங்கே வருவது தெரியுமா?"**

**"அவரால் தானே, வழிபட வந்த பெரியவர் ஒருவர் உங்கள் அறிவிக்கையைச் சொல்லி அனுப்பிவைத்தார்."**

"என் தாயைக் கொடியவர் எனமாட்டேன். ஏதோ தீய சூழலில் சிக்கி என்னைப் பெற்றுப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார். அவர் கொடியவர் என்றால், கழுத்தைத் திருகிக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுப் போயிருப்பாரே! **"உயரிய சிந்தனை அம்மா இது"** என்றார்."

❖❖❖

# 7. சான்றோர் வாழ்ந்த கடையம்

"அப்பா இப்பொழுது ஏதாவது வேண்டுமா?"

"எல்லாம் குறித்த பொழுதில் தருகிறாய். வேறொன்றும் வேண்டியதில்லை. அரசி கதவைத் தாழிட்டு வந்து, அவர் படுத்திருந்த கட்டில் அருகே நாற்காலி போட்டு அமர்ந்தாள்."

"தொல்லை இல்லை யானால், உங்களைப் பற்றிய செய்தியை நான் அறிய விரும்புகிறேன். அதற்காகவே தாழ்போட்டு வந்தேன்."

"அரசி எங்கள் பரம்பரை ஊர் திருநெல்வேலி சார்ந்த **கடையம்.** அது பழமையான ஊர்; சங்கச் சான்றோர்கள் வாழ்ந்த ஊர். அந்த ஊரில் இருந்த என் **தாத்தா அரசப்பன்**, கைத்தறிச் சீலை, வேட்டி, துணி ஆகியவற்றை வாங்கி தோளில் சுமந்தும் வீதியில் பரப்பியும் விற்பவராக இருந்தார். அவர் மணமான பின்னரே மனைவியோடு வந்தார். இந்த இராயப்பேட்டை பழையது என்றாலும் **நெரிசலான வீடு, கடை இல்லாத காலம்.** ஓரிரு தெருக்களும் பெருவெளியும் தோப்பும் தோட்டமுமாக இருந்த காலம்."

"தாத்தாவும் பாட்டியும் சிக்கனமாகக் செலவிட்டு, வருவாயைச் சேமித்தனர். விலை மலிவாக இருந்ததால் மூன்று மனையிடம் வாங்கினார்."

அப்பா காலத்தில் மக்கள் பெருக்கமாய் வீடு கட்டுமிடம் கிடைத்தற்கு அரியதாய் விலை ஏறிவிட்டது.

வாடகை வீட்டில் இருந்த அப்பா, ஒருமனையிடத்தை விற்று, இந்த வீட்டைக் கட்டினார்.

ஆக, விற்ற இடம்போக மற்றொரு மனையிடம் இருந்தது. அதற்குள் மனை விலை மும்மடங்கு நான் மடங்கு என ஆயது. அந்த நிலையில் இருந்த மனையிடத்தை விற்று விலை மலிவாகக் கிடைத்த **திருநின்ற ஊரில் விரிவான நிலபுலம் வாங்கினார்.** அதனை வாரத்துக்கு விட்டு விளைவில் பாதி பெற்று வாழ்ந்தார்.

திருநின்ற ஊர்க்குப் போக வர, அப்பாவொடு படித்த மாணவர் ஒருவர் காரணமாக இருந்தார். அங்கேயே **ஒருபெண்ணை விரும்பித் திருமணமும் செய்து கொண்டார்**. ஆனாலும், அங்கேயே தங்காமல் தாம் கட்டிய வீட்டுக்கே வந்து விட்டார். நான் இங்கே தான் பிறந்தேன்.

அப்பா ஓய்வாக இருங்கள். குடிப்புத்தந்து பூச்சு மருந்தும் தடவ வேண்டிய நேரம் என்று சொல்லிவிட்டுச் சமையல் அறைக்குச் செல்ல எழுந்தான்.

வாயில் மணி ஒலித்தது.

கதவைத் திறந்தாள்; பாட்டி வந்திருந்தார். இவருவரும் சமையல் அறைக்குப் போயினர்.

"தம்பி சாய்ந்து கொள்கிற நிலைக்கு வந்துவிட்டீர்கள். விரைவில் நீங்களே உட்காரும் நிலை ஆகிவிடும்."

"நல்லது பாட்டி, உங்கள் முதுமை பாராமல் செய்த உதவியைக் சொல்லச் சொல் இல்லை. உங்கள் வாழ்த்தின் வடிவே நாவுக்கரசி இங்கு வந்தது. அவள் நிறைகுடம்."

"தம்பி உங்கள் குணம் தான் ஒற்றியூரில் இருந்த அவளைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது."

அவள் **பாட்டை** நான் ஒருநாள் கேட்க வேண்டும். பேரன் சொன்னான், என்று புறப்பட்டார்.

நாவுக்கரசி தன்பாட்டு துயர்துடைக்கும் தூய மருந்து என்று நினைத்தாலும், நெஞ்சம் ஒதுவாரப்பாவையும் தன் வாழ்வில் ஏற்பட்ட திடீர் அவலங்களையும் மறக்க முடியா அமுத்தம் வாட்டுதலாலேயே பாடுதலை வெறுத்தும் மறுத்தும் வந்தார். ஆனால், பாட்டி வேட்கை முதுமை வேட்கை என எண்ணி பாட்டி அப்பாவுக்கு நான் பாடும்போது உங்களுக்குச் சொல்கிறேன், வந்து கேளுங்கள் என்றாள்.

அப்பாவுக்கு நான்பாடுவது **தாலாட்டு**; உங்களைக் கேட்க அழைப்பது உங்கள் தொண்டின் **பாராட்டு** என்றார். நகைத்துக் கொண்டே பாட்டி சென்றார்.

மருத்துவர் வந்தார். பதிவைக் கேட்ட அனைவரும் மெச்சினர்; உருகினர்; ஆனால், **கனிவைக் கொண்டிருந்தாலும் கல்லாக உள்ளீர்கள்** என்றார்.

**"ஆம் உங்களைப் போல என்றாள்"**

"என்னைப் போலவா"

"கத்தியை எடுத்து அறுவை செய்யும்போது, கசிந்து கண்ணீர் மல்க நின்றால், நோயர் நிலை என்னாம்?"

**கனிவான மருத்துவர் கல்லாவது இல்லையா என்றாள்.**

**நாவரசியைச் சொல்லால் வெல்ல முடியாது.**

**தொழிலுக்கே** அது என்றால், **தொண்டுக்குப்** பன்மடங்கு வேண்டும் அல்லவா;

"அப்பாவுக்கு நீரும் மலமும் எடுத்துத் தூய்மைப்படுத்தும்போது, **தாயாகிறேன்.** அப்பாவுக்கு உணவு ஊட்டும்போது **செவிலியாய், பாட்டியாய் மருத்துவியாய்** ஆகிறேன்."

அப்பாவுக்கு இசைக்கும்போது நானே என்னைக் **கரைத்துக்கொண்டு** மருந்தாகிறேன்.

ஆனால், **எப்பொழுதும் நான் நானாகவே இருக்கிறேன்.**

"கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு"

என்பதை மெய்யாக்குகிறீர்கள் என்றார் மருத்துவர். விரைவில் அரசப்பர் உட்காரத் தொடங்கிவிடுவார் என மருத்துவர் நடந்தார்.

❖❖❖

# 8. அடிக்கணக்கு

திருநின்ற ஊரில் இருந்து அரசப்பர் நிலம்பார்ப்பவர், வந்தார்.

'என்ன **பாலு** என்றார் அரசப்பர்.'

"நம் அம்மாவுக்கு உறவினராம்; **பெரியண்ணர்** என்னும் பெயராம்."

"ஆம்; அம்மாவின் தம்பி மகன்."

"என்னவாம்?"

அவர் ஓர் **முதியோர் இல்லம்** நடத்தப் போகிறாராம். ஊரைச் சாராமல் அகன்றும் போகாமல் காற்று வெயில் வரவும், தூசி தும்பு நாற்றம் ஓசை வாராததாகவும் ஓரிடம் தேடும் போது, நம்மிடம் அவருக்குக் கிடைத்தால் நல்லது என்ற எண்ணம் வந்திருக்கிறது.

"நீர் என்ன நினைக்கிறீர்?"

"நமக்கு நாலு குறுக்கம் இருக்கிறது. அவருக்கு வேண்டுவது **கால்குறுக்கம்** நமக்கும் குறைந்து விடாது. **நல்ல தொண்டுக்கு நம் நிலம் பயன்படட்டுமே** என்று நினைக்கிறேன்."

"நீர் இசைந்தால், உமக்கு ஏற்ற நாளில் அழைத்துவாரும் பேசலாம் என்று கூறியவர்,"

"விலை எப்படி என்றார்?"

திருநின்ற ஊர், பழைய ஊரில்லை. தனிநகர். அவ்வளவு விரிவு. நன்செய் புன்செய் எல்லாம் சதுர அடிக் கணக்குத்தான்; என்றார். அவரும் என்னை அறிவார்; நானும் அறிவேன். நேரில் பேசுவோம் என விடுத்தார்.

பாட்டி வந்தார்,

பாட்டி, நீங்கள் வந்த எண்ணம் அறிவேன். அப்பாவுக்கு உணவும் மருந்தும் தந்து விட்டேன் ஏதாவது குடிக்கத் தரட்டுமா? எனக்கு உன் இசைத்தேன் வேண்டும்.

'சரி அமருங்கள்' என்றார். அரசி கீழே அமர்ந்தாள்.

**"எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்**
**என்ன பொருத்த மோ?**
அப்பா நின்னை அன்றி எங்கும்
அணைப்பார் இல்லையே
அந்தோ நின்னை அன்றி எங்கும்
அருள்வார் இல்லையே
அப்பா எவர்க்கும் நின்னை அன்றி
இறைமை இல்லையே
எனக்கும் நின்னை அன்றி உலகில்
இச்சை இல்லையே;"

– எனக்கும் உனக்கும்

"பாட்டி இது வள்ளலார் பாட்டு;"

"அவர் வள்ளலார் தாம் அம்மா"

"இசை படித்தாயோ?"

தனியே நான் இசை பயிலவில்லை.

ஓதுவாரப்பா பாடுவது கேட்டுப் படித்ததுதான்;

ஒற்றியூர்ப் பூந்தோட்டக்காரர் வந்தார்.

அவரைக் கண்டதும் ஓடிப்போய்க் கையைப் பற்றி, அப்பா, இவர்தாம் ஓதுவாரப்பாவுக்குப் பின், எனக்குப் புகலிடம் தந்து காத்தவர். உங்களிடம் அனுப்பிவைத்தவர், என்று அறிமுகம் செய்தாள்.

இருவரும் வணங்கினர்.

"உங்களுக்கு ஓயா வேலையே, எப்படி வரவாய்த்தது?"

"அரசி என்னால் பூப்பறித்தாலும் தொடுக்க இயலவில்லை. ஒரு நல்ல பையன் கிடைத்தான். அவனைக் கூட்டாகச் சேர்த்துக் கொண்டு பார்க்கிறேன். நான் வந்தது ஒரு உதவி வேண்டி வந்ததாகும்."

இன்று விடியலில் பூப்பறிக்க நந்தவனம் சென்றேன். அருமையான பெண்குழந்தை ஒன்று அங்கே கிடந்தது. பதறிப்போய் எடுத்தேன். உயிரோடு இருந்தது. நான் தனிக்கட்டை உன்னை எண்ணினேன். மண்டபத்தில் தங்கியிருந்த முதிய அம்மா ஒருவரிடம் தந்து பார்த்துக் கொள்ளச் சொல்லி வந்தேன். என்றார்.

அரசி, அப்பாவையும் பாட்டியையும் பார்த்தார்.

பெரியவரே, உம்மை வள்ளலார் தாம் விடுத்துள்ளார். இங்கே குழந்தையைப் பக்குவமாகக் கொண்டு வந்து சேரும். **மறவாமல் காவல் நிலையத்தில் காட்டிப் பதிவு செய்து கொண்டு எடுத்துவாரும் என்று பாட்டியைப் பார்த்தார்.**

"தம்பி நானும் அரசியும் பார்த்துக் கொள்வோம் என்ன, அரசப்பர் அரசியிடம் நூறு உருபா கொண்டுவரச் சொல்லிப் பெரியவரிடம் தரச் சொன்னார்."

"பணம் வேண்டா, என்னிடம் இருக்கிறது என்றார்."

'இருக்கட்டும்' என்று சொல்லி, வழங்கச் சொன்னார். காவல் நிலையத்தில் குழந்தை ஒப்படைக்கப்பட்ட இடத்தையும் குறிக்கச் சொன்னார். ஏன் என்றால் பெற்ற குழந்தையை மருத்துவமனையிலேயே திருடி விற்பவரும், தெருவில் தவழும் பிள்ளைகளையும் திருடி விற்கும் காலமாகவும் உள்ளதால் பிற்சிக்கல் வரா வகைக்குச் சொன்னேன் என்றார். அவர் புறப்பட்டார்.

பாட்டி, குழந்தையை நான் பார்த்துக் கொள்வேன் என்றார். அரசப்பர் தாம் நினைத்திருந்த செயல், நிறைவேற முன்வந்த தூண்டல் இது என எண்ணிக் கொண்டார்.

❖❖❖

# 9. நந்த வனக் குழந்தை

"பாட்டி, தம்பி வேலைக்குப் போகுமுன் வருவார். சிறிது முன்னமே வந்தால் நல்லது என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள்" என்றார், அரசப்பர்.

பாட்டி வீட்டுக்குப் போய்ப் பன்னீரிடம் சொன்னார்.
பன்னீர் உடனே வந்தார்.
'தம்பி அமருங்கள்'

"நேற்று திருநின்றவூர் நிலம்பார்க்கும் பாலு வந்தார். அங்கே என் அம்மா வழி உறவினர் ஒருவர் நம் இடத்தில் கால் குறுக்கம் முதியோர் இல்லம் கட்ட விலைக்கு வேண்டும் என்றாராம். பாலுவும் செய்வது நல்ல செயல்தான். அவரும் நல்லவர்தாம் என்றார், என்று சொல்லியவர், உங்கள் கருத்தைக் கேட்க அழைத்தேன். அவ்விடத்தை அடுத்தே நாம் **குழந்தைகள் காப்பகம்** ஒன்று ஏற்படுத்தலாம் என்று எண்ணுகிறேன். இன்றைக்கு அவர் வந்தாலும் வரலாம். உங்கள் முடிவு அறியத்தான் அழைத்தேன் என்றார்."

என் எண்ணம் என்ன? உங்கள் எண்ணமும் அரசி எண்ணமும் என் எண்ணம் தான் நன்றாகச் செய்யலாம் என்றார்.

நேற்று ஒற்றியூரில் இருந்து நந்தவனம் பார்ப்பவர், அரசியைப் பாதுகாத்தவர், தாம் பார்க்கும் நந்தவனத்தில் ஒரு குழந்தை கிடந்ததாக வந்தார். அதனை இன்று இங்கு கொண்டுவருவார். பாட்டியும் அரசியும் பார்த்துக் கொள்வார்கள் என்றார்.

"எனக்கும் இன்னும் ஓராண்டுதானே வேலை. நானும் குழந்தையர் பாதுகாப்பு இல்லத்தை உங்களோடு பார்த்துக் கொள்ளவாய்க்குமே" என்றார்.

"நல்லது மாலையில் சந்திப்போம் என்று புறப்பட்டார்."

ஒற்றியூரார், அரசப்பர் கூறியபடி காவல் துறையில் பதிந்து விட்டுக் குழந்தையோடு வந்தார்.

அரசி, மகிழ்வோடு ஏந்தி வாங்கிக் கொண்டார்.

குழந்தையின் படம்பிடித்து, உடலில் மாறா **மச்ச அடையாளம்** பதிவு செய்து கொண்டு, இக்குழந்தையை உரிமை பாராட்டி எவரேனும் வந்து கேட்டாலும், **காவல் துறை ஒப்புகையோட தான் ஒப்படைக்க வேண்டும்** என்று சொன்னதைச் சொல்லிச் சென்றார்.

அரசி குழந்தையை எடுத்துக் கொண்டு பாட்டி வீட்டுக்குச் சென்றாள். பன்னீர்க்கும் பெண்பிள்ளை இல்லை. ஆதலால், பெண்பிள்ளையைக் கண்ட பன்னீர் துணைவியாரும் மகிழ்ந்தார்.

பாட்டி, குழந்தை இங்கேயே இருக்கட்டும். நீ ஊடே வந்து பார்த்துக் கொள் என்று சொல்ல அரசி வீட்டுக்கு வந்தாள்.

நண்பகலுக்கு மேல் பாலுவும் பெரியண்ணனும் வந்தனர்.

நலம்பற்றியும் உறவுபற்றியும் பேசிவிட்டுத் தாம் வந்த செய்தியைக் கூறினார். பெரியண்ணன்.

“பாலு சொன்னார்.

எனக்கு ஒரு திட்டம் உள்ளது. அதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த போதுதான் பாலு வந்து உங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார். அதுவும் நல்ல திட்டம்தான். என் திட்டத்தோடு தொடர்பு உடைய திட்டம் தான்.”

நான் குழந்தைகள் காப்பகம் ஒன்று உருவாக்க எண்ணியுள்ளேன். உங்களுக்குக் கால் குறுக்க இடம் வேண்டுமாம். அதே அளவு இடம் எங்களுக்குப் போதும்.

உங்களுக்கு பல அறைகள், குடியிருப்பு, சமையல் உணவுண்ணும் இடம் என வேண்டும்.

எங்களுக்குக் குடியிருப்பு, சமையல், அகன்ற அரங்கம் சுற்றுச்சுவர் என இருந்தால் போதும்.

பதிவை முடித்து, கட்டட வரைபடம் வரைந்து, ஊராட்சி இசைவு பெற்று வேலை தொடங்கலாம்.

நிலம் எங்கள் கொடை; கட்டடம் உங்கள் கொடை. சரி என்றால் உங்கள் இடப்பதிவை முடித்து விடலாம். அரசு மதிப்பீட்டுத் தொகைக்குப் பதிவுத்தாள் வாங்கிவிடலாம் என்றார்.

யாரையும் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டுமானால் அவ்வாறே செய்யுங்கள். வேறு இடம் பார்ப்பதானால் அவ்வாறே செய்யுங்கள். நான் படுத்திருக்கும் நிலை உங்களுக்குத் தெரியும். என் தந்தையார் வாங்கியதும், அங்கேயே மணம் கொண்டதும், நம் பழைமையான உறவும் நான் சொல்ல வேண்டியதில்லை. வாங்கிய நாள் முதல் பாடுபட்டு உரிய வாரம் கேளாமல் வந்து தாமே தரும் பாலு எல்லாமும் அறிந்தவர் என்றார்.

பேசிமுடிக்கும் வரை காத்திருந்த அரசி, அவர்கள் குடிப்புக்குக் கொண்டு வந்தார்.

என்னைப் பார்த்துக் கொள்ளும் மகளார் இவர் என்று அறிமுகம் செய்தார். அரசி வணங்கினார்.

குடிப்புப் பருகியபின்,

"கூடினாலும் குறைந்தாலும் இரண்டும் தொண்டுதானே" அதனால் நான் முழுமையாக ஏற்று வேண்டுவ செய்வேன். என்றார்.

"நீங்கள் திருநின்றவூர் வந்து விடுவீர்கள் அல்லவா."

"ஆம் அங்கே வந்து விடுவேன். அன்றிருந்த இராயப்பேட்டை, வயலும் தோப்பும் தோட்டமாக இருந்த நிலைவேறு"

உண்மைதான், ஆனால் திருநின்றவூரும் பழைய நிலையில் இல்லை. நம் பகுதி ஒதுங்கியதால் தான் நம்மிடம் தப்பியிருக்கிறது என்று கூறி விடை பெற்றார்.

❖❖❖

# 10. முதல் விருந்தாளி

மாலையில் வீட்டுக்கு வந்த பன்னீர், பாட்டி மடியில் ஒருகுழந்தையிருப்பது கண்டு மகிழ்வுடன், அரசப்பர் வீட்டுக்கு வந்தார்.

“மணிக்கணக்குள் என்னென்னவோ நடந்துள்ளது என்றார்.”

“நீங்கள் கண்டது போக நான் சொல்லப்போவது வியப்பாக இருக்கும்.”

“தம்பி, திருநின்றவூரில் இருந்து நம் நிலம் பார்க்கும் பாலு, என் அம்மா வழி உறவினர் **பெரியண்ணன்** என்பவரோடு வந்தார் என்று பேசி முடித்ததைச் சொன்னார்”

“தொல்லை இல்லாத நல்ல ஏற்பாடு; ஆனால், ஊடுயாரும் புகுந்து தடை செய்து விடக் கூடாது. முடிந்தபின்தான் உறுதிப்படுத்தலாம் என்றார். நல்லண்ணர் நல்லண்ணர் தாம்; அவர் பேச்சு மாறர்”

“பாட்டி மடியில் கிடக்கும் பிள்ளை நம் **குழந்தைகள் காப்பக முதல் விருந்தாளி, என்றார்.**”

**“பிறகு, நாம் இருவரும் பேச வேண்டிய பேச்சு”**

“சொல்லுங்கள்”

“நீங்கள் இருக்கும் வீட்டின் பரப்பும், இவ்வீட்டின் பரப்பும் ஒப்பானவையே. ஆனால், உங்கள் வீட்டுக் கட்டடத்தின் அமைப்பும், வாய்ப்பும், பரப்பும் இவ்வீட்டளவு இல்லை.”

“உண்மை தான்.”

“அது, எளிமையில், இயன்ற படி செய்தது. இது, வளமையில் செய்தது. கட்டடம் எப்படி இருந்தாலும் பழையதாயின் விலை மானம் இல்லை. இடத்தின் விலைதான் அது. ஆதலால், குழந்தையர் காப்பகம் தொடங்கியதும், நாங்கள் அங்கே போக, நீங்கள் இங்கே வந்துவிடலாம். இந்த இடத்தை உங்களுக்கு நான் எழுதித்தரவும், அந்த இடத்தைக் கேட்பவர்க்கு விற்று விடவும் செய்யலாம், என நினைக்கிறேன் என்றவர், அத்தொகை காப்பகத்தின் வைப்புத் தொகையாகிவிடும் என்று சொன்னார்.”

"என் உடன் பிறந்தார் ஒருவர் இருந்தால், அவர்க்குக் கூட வராத எண்ணம்" என்றார், பன்னீர்.

"உங்களைப் பார்க்கிலும் எனக்கு உறவு யார்?"

"மகள் அரசியும் என்னோடு இருப்பாள்; பாட்டியும் கூட, காப்பகம் வந்து விடலாம். உங்களுக்கு இரண்டு மக்கள். இருவருக்கும் போதுமான கட்டடம் என்றார்."

காப்பகம் தொடங்கியபின் இவற்றைச் செய்யலாம் என்று புறப்பட்டார்.

"அரசி நாங்கள் பேசியதைக் கேட்டாயா?"

"அப்பொழுதில் என் செவி செவிடாகிவிடும் அப்பா."

"நீ இன்னும் அயல் இல்லையே."

"நான் அயல் என எண்ணவில்லை. அதேபோல், உங்களுக்குத் தொண்டு செய்ய வந்த செவிலி என்பதை நான் மறக்க மாட்டேன்."

"அப்பா, உங்கள் அப்பா வாழ்வைச் சொன்னீர்கள். இன்னொருநாள் சொல்லுங்கள் என்று நானே ஓய்ந்திருக்கச் சொன்னேன்."

"ஆம்; அப்பா துணி சுமந்து விற்றார். வளமும் பெற்றார். அதனால், நான் பத்துவரை படித்து அடுத்துள்ள கீழமேல் நெடுந்தெருவில் ஒரு வீட்டின் முன் அமைந்த சிறிய கடை ஒன்றை வாடகைக்கு எடுத்துத் துணிக் கடை போட்டேன்."

வணிகம் ஓரளவு நன்றாகவே நடந்தது. கடையின் உள்ளே இருந்தவரும் வாடகைக்கு இருந்தவரே. கடை போட்டதன்பின் அவ்வீட்டுகாரார், எங்களூரை அடுத்த **பாவூர்ச்சத்திரத்தார்** என்பதை அறிந்தேன். வீட்டுக்காரப் பெரியவரும் அவர் மனைவியாரும் என் ஊரை அறிந்தபின் நெருங்கிப் பழகினர். அவர்க்கு, ஒரே மகள். அவரும் அன்புடன் பழகினார்.

என் அப்பா அம்மா முதுமையராகி விட்டதால், வேலைக்கு வேண்டா என்று சொல்லிவிட்டேன்.

அவர்கள் திருநின்ற ஊரிலும், கடையத்திலும் எனக்குப்பெண் பார்த்தனர். நான் நாளைத்தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். முப்பதைத் தாண்டும் நிலையில் மணம் செய்ய ஏற்றேன். ஆனால், 'நான் விரும்பும் பெண்ணையே மணப்பேன்' என்றேன். அவர்கள் ஒப்பினர்.

பாவூர்ச்சத்திரத்தார் பழக்கமும், அவர்கள் மகளார் **திருமணியின்** விருப்பும் கூட, நான் அவரை மணந்து கொண்டேன். என் பெற்றோர்கள் முதுமையால் இயற்கை எய்தினார். என் அப்பாவுக்கு மட்டும் இடுப்பு வலி இருந்து பட்டை போட்டுக் கொண்டிருந்தார்.

அவர்கள் கண்முன் ஒரு பேரப்பிள்ளையைப் பார்க்க எண்ணினர். அந்த எண்ணம் இருவருக்கும் இருந்தது. ஆனால், என் துணைவியார் உயர்ந்த பண்பாளி; குடும்பப் பெண்ணின் இலக்கணத்தை அவரைக் கொண்டு எழுதிவிடலாம். மகப்பேறு வாய்க்கவில்லை எனக் கவலை அடையவில்லை. ஆனால், ஏழெட்டு ஆண்டுகழித்துக் கருவுற்றார். மகப்பேறு அடையும் நிலையில் குழந்தை தலை மாறாய் இருந்து அறுவையால் எடுக்க நேர்ந்த நிலையில் குழந்தை இறந்தே பிறக்க, அவரும் இறந்தே போனார். என்நிலை தாங்காத் துயராயிற்று.

நான் கடை திறக்கவில்லை. அவர்கள் சென்னை வாழ்வையே வெறுத்துச் சொந்த ஊர்க்கே போய்விட்டனர்.

நான் கடைக்கு வைத்திருந்த பையன், கடையில் உள்ள தொகை, துணிவிற்கும் தொகை, மொத்த வணிகக் கடையில் என்பேரால் கடனாகத் துணி வாங்கல் என என்னைக் கடனாளியாக்கி ஓடிவிட்டான்.

வீட்டிலே அடைந்து கிடக்கக் கூடாது என்று பலரும் சொல்ல, கடைக் கணக்கு எழுதுபவனாகப் போனேன். உணவு கொள்ள முடியவில்லை. உறக்கம் வரவில்லை; இந்நிலையில் முதுகந்தண்டு தேய்மானமாகியது. கடையில் ஏதோ மருந்து மாத்திரை என வாங்கிப் பயன்படுத்தியும் பயனில்லாமல் போகவே, அதன்முன் ஓரளவே பழகியிருந்த நிலை கொண்டு வந்து பார்த்து பன்னீரும் பாட்டியும் செய்த உதவியால் உயிர்க்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் தான் செய்தித் தாளில் அறிக்கை விடுத்தேன் என்றார்.

என் வங்கிக் கணக்கில் இருந்த எடுத்தல் போடுதல் தொகையும், நிலை வைப்புத் தொகையும் கடைப் பையனால் எடுக்க முடியாமையால் பணச்சிக்கல் இல்லாமல் மருத்துவம் செய்ய முடிந்தது.

என் நிலை அறிந்த திருநின்ற ஊர்ப் பாலு கேளாமலே வாரத் தொகையைத் தந்து கொண்டிருந்தார். இதுதான் என் நிலை என்றார்.

"ஏதோ சொல்ல நினைக்கிறீர்கள்"

"ஆம் தயக்கமாக உள்ளது."

**"தயங்காமல் சொல்லத் தக்கவளாக நானில்லையா?"**

"என்தாய், துணைவி தவிர நான் பெற்ற மகள் கூடச் செய்ய முடியாத செயலைச் செய்ய உன்னை வைத்துவிட்டேனே என்பது தான்;" **"அப்பா, அம்மா மருத்துவமனையில் மகப்பேறு ஆகும்போது மருத்துவர் ஆண், பெண் தானே செய்தனர்; பெண் மருத்துவர் ஆண்களுக்கும், ஆண் மருத்துவர் பெண்களுக்கும் மருத்துவம் செய்வது இல்லையா? அப்பொழுது மானக்கேடு என்றோ, அருவறுப்பு என்றோ பார்ப்பதும் எண்ணுவதும் உண்டா? செவிலியர், ஆண்களும் பெண்களும் தாமே;**

"அப்பா '**நிர்வாணம்**' என்பது என்ன?" புத்தர் சிலை, அருகர் சிலை என்பவற்றைப் பார்த்திருப்பீர்களே; அம்மணமாக என்பது, அமணர் (சமணர், திகம்பரர்) நிலைதானே; சம்மணம் போட்டு உட்காருதல் தீர்த்தங்கரர் நிலைதானே; அப்பா உங்கள் பணியை ஏற்றது **தெய்வப்பணி** என்பது தானே.

**"இறைவர்க்கு இமவான்மகள், தாய், மனைவி, தங்கை மகள்"** என்று **குமரகுருபரர்** சொல்வது, மக்கள் தொண்டு குறித்துத்தானே. இறைவனுக்குச் சொன்னது மக்கள் வாழ்வு நிலைக்காகவே என **ஓதுவாரப்பா உருகி உருகிச் சொல்வார். அவர் வளர்ப்பு மகள் நான்.**

❖❖❖

## 11. புண்படுத்தமில்லை பண்படுத்தம்

"புண்படுத்துகிறேனா என்றீர்கள்; பண்படுத்துகிறீர்கள் என்று நான் சொன்னதை மறந்து விட்டீர்களே."

"அரசி, நீ என்னில் பாதி வயது. அறிவு ஆற்றல் செயல்பாடுகளில் பன்மடங்கு உனக்குள்ளது."

"நான் பேசினால், நீங்கள் தரும் உரிமை;"

அவ்வுரிமையில்லா இடத்தில் வாய்திறக்க முடியுமா?

"உன் பார்வையின் என் நிலை எப்படி உள்ளது?"

அது நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது.

"எப்படி?"

"உள்ளக் கிளர்ச்சி, உடல் எழுச்சி"

**"உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடின்**
**உள்ள நிறைவாமோ உள்ள நிறைவாமோ?**
**ஒள்ளொளி உடையாய் உள்ள நிறைவாமோ?"**

என்பது எப்பொழுதோ கேட்டதொரு பாட்டு;

அப்பொழுது மணியொலி கேட்டது. போய்த்திறந்தாள் அரசி. அவளைக் கண்டதும் திகைத்தாள் வந்தவள். உள்ளே வந்ததும்,

**"இவள் யார்?"**

**"என் வளர்ப்பு மகள்."**

**"நான் மகள் இல்லையா?"**

"நீ மகள் என்பதை என்றாவது மறந்தேனா? மறப்பேனா? மறக்கத்தான் முடியுமா?"

**பிறகு ஏன் இவள்?**

நானாக எழும் நிலை எனக்கு இல்லையே; உனக்குத் தெரியாதா?

"சரி, எவ்வளவு காலம் இருப்பாள்;"

"என்றும் இருப்பாள்."

"சரி, வருகிறேன்;"

"நன்றாக இரு"

"நன்றாக இல்லாதவர்க்கு, நன்றாக இரு என வாழ்த்த வாய் மட்டும் நன்றாக வருகிறது."

"மகளாம் மகள்!"

கதவைப் படாரெனச் சாத்திவிட்டுப்போய் விட்டாள். திகைப்போடு வந்தால் அரசி;

**"என் தம்பி மகள்"**

"நீ எதுவும் எண்ணாதே;"

**"நான் செவிடி; ஓதுவாரப்பா வெள்ளத்தை நீக்கியவளுக்கு, இது சிறு வாய்க்கால்;"**

போனவள் வந்தாள் மீண்டும்.

"என்ன?" என்றார்.

"வீடாவது உங்களுக்குப்பின் உங்கள் தம்பிக்கு வருமா?"

"உன்னப்பா வீடு, எனக்கு வருமா என நான் கேட்கலாமா?"

"என்னப்பா தம் உழைப்பால் தம் மகனுக்குக் கட்டிவைத்தது; **'விருட்'** டென்று சென்று கதவைப் 'படார்' எனத் திறக்க 'சடார்' என நெற்றியில்பட, நெற்றியைத் தடவிக் கொண்டு போனாள். அவள் போனபின் வழக்கம் போல் பன்னீர் வந்தார்."

"அண்ணா, நல்ல செய்தி; தம் இடத்தைப் பதிந்து வாங்கியபின்தான் முறையாக வரைபடம் போட்டுக் கட்டுமான இசைவு பெற்றுக் கட்டலாம் **முதியோர் இல்லம்.**"

ஆனால், **குழந்தையர் காப்பகம்** உடனே வரைபடம் போட்டு இசைவு பெற்றுக் கட்டுமானம் தொடங்கிவிடலாம் எனப் பெரியண்ணன் செய்தி விடுத்துள்ளார்.

ஆதலால் நம் வேலை முன்னேயும் அவர்கள் வேலை பின்னேயும் நிகழ்ந்து விடும் என்றார்.

மகிழ்ச்சி என்ற அரசப்பர், வரைபடம் வரைய ஆள் பார்த்து இங்கே வரச் சொல்லுங்கள்.

'சரி' என்று அவர் போனார்.

உணவின் முன் மருந்து, குடிப்பு, உணவு என வேலையில் சென்றாள் நாவுக்கரசி. **நா, சொல்லுக்கு மட்டுமில்லை; சுவைக்கும்தானே;**

"அரசி, **வெந்நீர்** கொட்டியது; உடனே, **பன்னீர்** சொட்டியது பார்; நீ வந்தபின், **ஒப்ப நினைக்கும் உள்ளம் எனக்கு வந்துவிட்டது.**"

"**ஊற்று** வெளியே இருந்து வாராது; **உள்ளே இருந்து சுரப்பது** என்பது இயற்கை உணர்த்தும் பாடம்;"

"என் அப்பா, மெல்லெனச் சாய்வில் இருந்து நிமிர்வாராம்" என்று சொல்லி முதுகுப் பக்கம் போக, அரசப்பர் நிமிர்ந்தமர்ந்தார். குவளையை வாங்கிக் குடிப்பைக் குடித்தார்.

"வலி?"

"இல்லை; நிமிர்ந்த போதே முதுகுப்பூச்சு மருந்து தடவினாள்."

"அப்பா ஒரு செய்தி."

**இப்படி ஆண், பெண் இறையுருவுக்கு நீர் விட்டுப் பூசுதல்தான் 'பூசகர்' பணி. அது பூசையாய்,** பூப்போட்டுச் செய்வதாய், அருச்சனையாய் ஆகிப் பணப்பறிப்பு ஆகிவிட்டது; **நான் உங்கள் பூசகர்**; புதிய, அரிய செய்தி என்றார்.

"ஓதுவாரப்பா கொடை" என்றாள்.

❖❖❖

# 12. காப்பக அமைப்பு

மருத்துவர், ஆய்வுக்கு வந்தார். அவர் முழுதுற ஆய்ந்தார்.

"இன்று நான் **இடுப்புப் பட்டை** போடுவேன். உட்காரும் போதும் நடக்கும் போதும் பட்டை இருக்க வேண்டும். படுக்கும்போது கழற்றி விடலாம்" என்று அவரே மாட்டிக் காட்டினார்.

"கழிப்புக்கல இருக்கை" கடைகளில் உண்டு. அதனை வாங்கிப் பக்கத்தே வைத்துத் தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒருவர் துணையோடு மெல்ல நடக்கலாம். வலியுண்டாக இருக்கவோ, நடக்கவோ வேண்டா.

நெடுநாள் படுக்கையில் இருந்ததால் **நடுக்கம்** உண்டாம். சிலநாள்களில் இயல்பாகிவிடும் என்றார்.

எல்லாமும் அரசி கேட்டுக் கொண்டார். மருத்துவர் புறப்பட்டார்.

மாலையில் பன்னீர் வந்தார்.

மருத்துவர் சொல்லியதை அரசப்பர் சொல்ல, அவர் கழிப்புக்கல இருக்கை வாங்கி வந்தார்.

"அரசி பக்கத்தில் இல்லாமல், நீங்களே இறங்கிப் பயன்படுத்த வேண்டா என்றார்."

"நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார் அரசி."

"வரைபடம் போடுபவர் நாளை வருவார் என்றார்."

"அரசி, காப்பக அமைப்புப் பற்றி ஏதாவது சொல்கிறாயா? என்றார் அரசப்பர்."

"அப்பா, உங்களுக்குத் தெரியாததா?"

"உன் கருத்தறிந்தால் எண்ணலாமே;"

உங்களுக்கு அகலமும் காற்றோட்டமும் வெளிச்சமுமான ஓர் அறை வேண்டும்.

குழந்தைகள் காப்பகம் ஆதலால் தொட்டில் கட்ட, கட்டில் தொங்கவிட நீளமும் அகலமுமான ஒருபக்கத் திறந்தவெளி நீளறை வேண்டும். திறந்த வெளியை, வேண்டும் போது மூடும் திரை வாய்ப்பு வேண்டும். அங்கேயே துணிகள் வைக்கத் தட்டுகள் சுவரில் அமைத்து மூடுதிரை அல்லது தள்ளுகதவு அமைத்து விடலாம். அப்பகுதிக்கு அப்பால் துணியலச, உலர்த்த நீர்வாய்ப்புடைய தொட்டியும் சலவைத் திண்டும் வேண்டும்.

சமையல் பகுதியும், சமைப்பவர் தங்கவுமான இரண்டு அறைகள் வேண்டும். நான் உங்கள் அறையின் பகுதியில் தங்கத் தடுப்பு அறை வேண்டும். உயரக் கழிப்புக் கோப்பை அமைந்த அறை, நீராடத் தக்க வாய்ப்புடன் வேண்டும்.

பார்வையாளர்கள் வந்தால் உரையாடவும், தங்க வேண்டுவதாயின் அதன் ஒரு பகுதியில் ஓர் அறையும் வேண்டும். அதற்குப் பொதுக் கழிப்பிடம் வேண்டும். நான் நினைப்பது இது. மற்றவை தங்கள் கருத்தும், பன்னீர் அண்ணன் கருத்துமாம் என்றாள். மேலும்,

கட்டடவேலை முடிந்ததும் குழாய்க்கிணறு, சுற்றுச் சுவர் வேண்டும். இவற்றுள் குழாய்க்கிணறும் மின் இணைப்பும் முன்னரே அமையின் கட்டுமான வேலைக்கும் மிகவாய்ப்பாகி விடும் எனறாள்.

அமைந்து கேட்ட அவர், "தம்பியோடு கலந்து வரைபவர்க்குச் சொல்லிவிடலாம். இத்திட்டம் தக்க திட்டமே என்றார்."

"நீ எங்காவது காப்பகம் கண்டிருக்கிறாயா?"

"நான் கண்ட காப்பகம் ஓதுவாரப்பா வீடுதான்."

"உன்னால் மறக்க முடியாதவர் திருப்பதி ஓதுவார்;"

"தாயும் தந்தையும் ஓருருவாக என்னைக் காத்தவர் - வளர்த்தவர் அவர்தாமே; அவர் இல்லையானால் உங்கள் தொண்டுக்கு வந்து உங்கள் மகளாகி இருக்க முடியுமா?"

"அவர் படம் உண்டா?"

"இல்லை. என் நெஞ்சப் படம்தான்."

"கோயில் மண்டபத் தங்கல், இடராக இல்லையா?"

"தனிப்பெண்ணுக்கு வரும் இடர் மண்டபத்தில் மட்டுமா, பிறந்த வீட்டில், வேலைத்தளத்தில், தெருவில் நடமாடலில் வரும் இடர்க்குக் கோயில் மண்டபத் தங்கல் குறைவாக இருக்குமா?"

"உள்ளப் போராட்டத்தை வெல்லல், சூழல் போராட்டத்தை வெல்லல், கைம்மையுடைக் காப்பு எல்லாரும் கொண்டுதான் நான் நானாகவே வாழ்ந்தேன்."

"எப்படியும் ஒருநாள், எல்லாமும் வந்தபடி போகத்தான் போகிறோம். அதற்குள், '**ஒருவர் துயரப் போராட்டத்தைச் சிறிதேனும் துடைக்கும் தொண்டுக்குப் பயன்படுத்தலாமே**' என்ற எண்ணத் தூண்டலே, ஒற்றியூரில் இருந்த நான். இராயப்பேட்டை வரவும், திருநின்றவூருக்குத் தொடரவும் ஆக்குகின்றது. என்றாள். "

"நீ வராமல் இருந்தால் என்னிலை, என்னிலை;"

"யாராவது வந்திருப்பார்; அல்லது பாட்டி பார்த்துக் கொண்டிருப்பார்; உலகத்தில் நான் ஒருத்தி மட்டுமேயா உள்ளேன்; உங்களிலும் கொடு நோய்த் துயரர் இல்லாமலும் இல்லையே; அங்கங்கே யார் யாரோ இருக்கத்தானே செய்கின்றனர்." என்றாள் நாவுக்கரசி.

பாராட்டுதலும் விரும்பாத அவளை எண்ணிப் புன்னகைப் பூத்தார் அரசப்பர்.

அரசி சொல்லிய திட்டம் சரியானதே. மேல் நிலை நீர்த்தொட்டி, கழிப்பறைக்குரிய தொட்டி என இணைக்க வேண்டும். கட்டுமானப்போதிலேயே அவற்றை முடித்து விடல் நல்லது என்றார் பன்னீர். அண்ணன் சொல்வது மிகச் சரியானது என்றார் அரசி.

❖❖❖

# 13. திறப்பு விழா

அரசர் நிற்க நடக்கத் தொடங்கிவிட்டார். ஓராண்டளவில் குழந்தைகள் காப்பகக் கட்டடப்பணி, முதியர் இல்லப்பணி என இரண்டும் முடிவடைந்தன. பெரியண்ணன் ஊடே ஊடே வந்து அரசப்பரைக் கலந்து பேசினார். முதியோர் சிலர் பதிவு செய்துள்ளதைத் தெரிவித்தார்.

ஊதியம் கருதாத தொண்டாக இருக்குமே அல்லாமல், இலவயமாக நடத்த இயலாது என்று தம் முடிவைக் கூறினார்.

"இலவயம் என்பது கோடிகோடியாக உதவிகளை அரசிலும் உள்நாடு வெளிநாடுகளிலும் திரட்டிக் கொழுத்த செல்வம் கொழிக்கச் செய்யும் வழி, அவர்கள் தொடங்கும் போது வைத்துள்ள சொத்தையும் பின்னே வளர் நிலையில் கொண்டுள்ள சொத்தையும் கணக்கிட்டால் வெளிப்படையாக விளங்கும்" என்றார்.

பெரியண்ணன் சொல்வது முற்றிலும் உண்மை, என்றார் அரசப்பர். பெயர் என்ன வைப்பது, திறப்பு விழா எப்போது என்பதை நாம் முடிவு செய்து அழைப்பிதழ் அடிக்க வேண்டும் என்றார்

உங்கள் இல்லமும், காப்பகமும் தோற்றத்தில் வேறு வேறாக இருந்தாலும் ஒரே நிறுவனம் போன்றதுதான். **ஒரே நாளில், ஒரே மேடையில் திறப்பு விழா நடத்திவிடலாம்** என்றார் அரசப்பர்.

"நானும் அதனையே எண்ணினேன்."

"பெயர் என்ன நினைக்கிறீர்கள்?"

"என் எண்ணத்தைச் சொல்கிறேன்; உங்களுக்கு ஏற்குமானால் அவற்றை வைத்துக் கொள்ளலாம். வேறு சிந்தனை இருந்தாலும் சொல்லலாம் என்றார்"

**உலகுக்கு ஒரு நூல் - அறநூல் - செய்தவர் வள்ளுவர். அவர் பெயரை முதியோர் இல்லத்துக்கும்**, அவர் வழியே வாழ்ந்து, **உலகுக்கு ஒளிவழிபாடு** என்னும் **உலகப் பொதுமைச் சமயம்** காட்டிய **வள்ளலார்** பெயரைக் **குழந்தையர் காப்பகத்துக்கும்** சூட்டலாம் என்பது என் எண்ணம் என்றார்.

"அரிய சிந்தனையின் விளைவு இருபெயர்கள் என்றார் பெரியண்ணன்."

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்" என்றவர் **வள்ளுவர்**. இது, பிறக்கும்போதே உண்டாகிய பசிப்பிணி அகற்றுதல்; கதிரொளி அடையாளமாக **ஒளிவழிபாடு** வாழ்வில் கப்பிய இருளை அகற்றிச் சுடரச் செய்வது **ஒளிவழிபாடு** என்றார். ஆகவே, '**வள்ளலார் முதியர் இல்லம்**', '**வள்ளலார் குழந்தையர் காப்பகம்**' - மிக மிகப் பொருந்தியதே; என்றார் பெரியண்ணன்.

நான் நடையிடத் தொடங்கி விட்டேன். **என் உறவினர் நீங்கள்.** என் வளர்ப்புமகள் **நாவுக்கரசி**; உங்கள் உரிமைத் தங்கையாக அவர் காலமெல்லாம் தெய்வக் கடமையாகச் செய்வார். என் அன்புத் தம்பி **பன்னீர் தம் நலம் கருதாத் தொண்டர். அவர் தொண்டு இரண்டு நிறுவனங்களுக்கும் இருக்கும்** என்றார்.

**"இல்லப் பொறுப்பாளர் நீங்கள்"**

**"காப்பகப் பொறுப்பாளர் நாவுக்கரசி."**

"**மாவட்ட நலத்துறை அலுவலர்** - முதியோர் இல்லத் திறப்பாளர். **தமிழ்த்திரு. பொ. எழிலனார்.**"

"**மாநிலக் குழந்தையர் நலச் சிறப்புக் கருத்தாளர்:** - மருத்துவர் **தமிழ்த்திரு. அறவாழி செந்திலார்.**" குழந்தையர் காப்பகத் திறப்பாளர்

நாள்: 10.10.2019,

எனத் திட்டப்படுத்தினர்.

பன்னீர் வந்தார், 01.10.2019இல், திருநின்ற ஊர் செல்வதாகவும், அதன்பின் அவர்கள் தம் வீட்டுக்கு வந்து விடலாம் என்றும் முடிவு செய்தனர்.

பன்னீர் வீட்டு விற்பனைத் தொகை, **காப்பக அறக்கட்டளை யாகிவிடும்** என்று முன் பேசியவாறு உறுதிப்படுத்தினர்.

பாட்டி காப்பகத்துக்கு வருவதாயின் எப்பொழுதும் வரலாம். அது உங்கள் முடிபு சார்ந்தது என்றார் அரசு.

திருநின்ற ஊரே மகிழ்வில் திளைத்தது. பழம்பெருமை வாய்ந்த இவ்வூர் புதுப் பெருமையும் பேறும் கொள்கிறது.

**அறவர் வள்ளுவரும், அருளர் வள்ளலாரும் ஆகிய திருவர்கள்** ஒன்றாய்க் கிளர்ந்த **திருநின்ற ஊராயிற்று** என்று மகிழ்ந்தனர். **காப்பகமும் இல்லமும் திறக்கப்பட்டன.**

**இளமையும் முதுமையும் எவர்க்கும் உண்டு.**

இரண்டும் தக்க வகையில் பேணிக் காக்க வேண்டும் பருவங்கள் அவற்றுக்கு நிழலாய், நீராய், உணவாய், மருந்தாய், வளமாய், வாழ்வாய் அமையும் நிறுவனங்கள் இவை.

"ஊருக்கு உழைத்தல் ஓகம்" என்பதை உறுதி செய்யும் பெருமக்களால் தொடங்கப்டுகின்றன. ஊரவர் உற்ற வகையில் காக்கவும் வளர்க்கவும் பெருமை சேர்க்கவும் கடமைப்பட்டுள்ளனர் என்று பொழிவாளர்கள் கூறி வாழ்த்தத், திறப்பு விழா **சிறப்பு விழாவாக நிகழ்ந்தது.**

**ஒத்த நிறுவனங்களாய் இரண்டும்**
**உவந்து நடையிட லாயின;**

**வாழிய நலனே! வாழிய நலனே!!**

❖❖❖

## 14. நிறைவு

**"பிறர் துயரம் துடைத்தற்குத் தாவும் கைகள்**

**பெரியோனின் பேரருளைக் கூப்பும் கைகள்;**

பிறர் துயரம் துடைத்தற்கே பேசும் வாய்கள்;

பெரியோனின் பேரருளை வாழ்த்தும் வாய்கள்;

பிறர்துயரம் துடைத்தற்கே எண்ணும் நெஞ்சம்

பெரியோனின் பேரருளில் நிலைத்த நெஞ்சம்


மறவாமல் இந்நோன்பு கொண்டார் அன்றே,

மலர்மிசையோன் மாணடிக்கண் சேர்ந்தார் அன்றே!"

**நூல் - வாழும் தாயுமானவர்.**

❖❖❖

# குறிப்புக்காக...



அருகதாசு, தமிழ்நன்மதி, நிர்மல் குமார்